KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 10 No. 07 (2026)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
Vol. 10 No. 07 (2026): Kalanjiyam Special issue - November 2026

UGC Approved by Transparent Peer Review

சங்க இலக்கியத்தில் கார்கால மலர்களும் தமிழர்களின் இயற்கை அறிவும்: முல்லை, பிடவம், தளவம், கொன்றை, தோன்றி, காந்தள், காயா மலர் - ஓர் ஆய்வு

Monsoon Flowers in Sangam Literature and the Ecological Knowledge of the Tamils: A Study of Mullai, Pitavam, Thalavam, Konrai, Thondri, Kanthal, and Kaya

D. Muthuramya[1*], Dr. N. M. Kavitha[2]

[1] Research Scholar (Full-time), Department of Tamil, Vellalar College for Women (Autonomous), Thindal, Erode – 638012, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0009-0001-6266-2208

[2] Assistant Professor, Department of Tamil, Vellalar College for Women (Autonomous), Thindal, Erode – 638012, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0009-0005-9683-3860

*தொடர்புக்கு: d.muthuramya_phd@vcw.ac.in

ARTICLE INFO

Article history
Received: 05 November 2026
Revised: 10 November 2026
Accepted: 14 November 2026

Article ID
KIJTS10n07m112026.03

DOI
10.63300/KIJTS10n07m112026.03

Peer review
Double-blind peer review

Keywords
சங்க இலக்கியம்
கார்காலம்
முல்லைத் திணை
கார்கால மலர்கள்
பருவ அறிவு
பாரம்பரியச் சுற்றுச்சூழல் அறிவு
கருப்பொருள்
உள்ளுறை

ABSTRACT

சங்கத் தமிழர் கார்காலத்தின் வருகையை மலர்களின் மலர்தல் வழியாக அளந்தறிந்தனர் என்பதையும், சங்க இலக்கியத்தின் திணைக் கோட்பாடு நிலம், பொழுது, கருப்பொருள் ஆகியவற்றை இணைக்கும் சூழலியல் கட்டமைப்பாக விளங்குகிறது என்பதையும், முல்லை நிலத்துக் கார்காலத்தில் முல்லை, பிடவம், தளவம், கொன்றை, தோன்றி, காந்தள், காயா போன்ற மலர்கள் ஒருசேரப் பூத்து பருவக் குறிகாட்டிகளாகவும் உளவியல் குறியீடுகளாகவும் விளங்குவதையும் இவ்வாய்வு ஆராய்கிறது.

இம்மலர்கள் பல்லுயிர்ச் சூழலின் சமநிலைக்குச் சான்றுகளாகச் செயல்படுகின்றன. இவை யாவும் சங்கத் தமிழரின் பாரம்பரியச் சுற்றுச்சூழல் அறிவின் (Traditional Ecological Knowledge) வெளிப்பாடுகளாகும் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. இந்த ஆய்வுக்கு முல்லைத் திணையின் கார்கால மலர்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ABSTRACT

This study investigates the ecological knowledge of the ancient Tamils, particularly their understanding of the monsoon season through the phenological patterns of flowering plants. It examines how the Thinai concept in Sangam literature functions as an integrated ecological framework encompassing geographical landscapes (Nilam), seasonal and temporal dimensions

© 2026 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS

(Pozhuthu), and landscape-specific natural elements (Karupporul). The study focuses on the flowers associated with the Mullai landscape during the monsoon season, namely Mullai, Pitavam, Thalavam, Konrai, Thondri, Kanthal, and Kaya. Their simultaneous flowering patterns are explored as significant biological indicators of seasonal transitions and as symbolic representations of human emotions and psychological experiences in Sangam poetry.

Furthermore, the study analyses the ecological significance of these floral elements as indicators of biodiversity and environmental equilibrium. It argues that the representation of monsoon flowers in Sangam literature reflects the Traditional Ecological Knowledge (TEK) of the ancient Tamils, demonstrating their keen understanding of seasonal variations, plant phenology, biodiversity, and the intricate interrelationship between human life and the natural environment. This study is confined exclusively to the monsoon-season flowers of the Mullai Thinai (pastoral landscape) in Sangam literature.

Keywords: Sangam Literature, Monsoon Season, Mullai Thinai, Monsoon Flowers, Ecological Knowledge, Traditional Ecological Knowledge, Karupporul, Ullurai, Plant Phenology.

How to cite this article: Muthuramya, D., & Kavitha, N. M. (2026). சங்க இலக்கியத்தில் கார்கால மலர்களும் தமிழர்களின் இயற்கை அறிவும்: முல்லை, பிடவம், தளவம், கொன்றை, தோன்றி, காந்தள், காயா மலர் - ஓர் ஆய்வு [Monsoon Flowers in Sangam Literature and the Ecological Knowledge of the Tamils: A Study of Mullai, Pitavam, Thalavam, Konrai, Thondri, Kanthal, and Kaya]. *KALANJIYAM – International Journal of Tamil Studies, 10*(7), 27–41. https://doi.org/10.63300/KIJTS10n07m112026.03
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

1. முன்னுரை

சங்க இலக்கியம் தமிழரின் இயற்கை அறிவைப் பதிவு செய்த மிகப் பழைய ஆவணம். நிலம், பொழுது, கருப்பொருள் ஆகிய மூன்றையும் இணைத்துப் பார்க்கும் திணைக் கோட்பாடு உலக இலக்கியத்தில் அரிதான ஒரு சூழலியல் கட்டமைப்பாகும். சங்க காலத் திணைக் கோட்பாடு சூழலியல் பின்புலம் சார்ந்ததாகும். சங்க மக்களும் சுற்றுச்சூழலை மையப்படுத்திய வாழ்க்கை வாழ்ந்தனர். சங்க கால மக்களின் வாழ்க்கைச் சூழலில் மலர்கள் நிலத்தையும், காலத்தையும் அடையாளம் காட்டும் குறியீடுகளாக இருந்துள்ளது

தொல்காப்பியர் முல்லை நிலத்துக்கு உரியதாக கார்காலத்தையும் மாலைப் பொழுதையும் குறிப்பிடுகிறார். இது ஒரு நிலத்தின் தாவர வாழ்வையும் ஒரு பருவத்தின் வானிலையையும் ஒரே கோட்டில் இணைக்கிறது. கார்காலம் தொடங்கியதும் முல்லை நிலக் காடுகளில் முல்லை, பிடவம், தளவம், கொன்றை, தோன்றி, காந்தள், காயா ஆகிய மலர்கள் ஒருசேரப் பூக்கின்றன. இவ்வொருங்கிணைந்த பூப்பைச் சங்கப் புலவர்கள் பல பாடல்களில் கூர்ந்து பதிவு செய்துள்ளனர்.

1.1 ஆய்வு நோக்கங்கள்

1. சங்க இலக்கியத்தில் கார்கால மலர்கள் எவ்வாறு பருவக் குறிகாட்டிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிதல்.
2. ஏழு மலர்களின் நிறம், வடிவம், வளரியல்பு குறித்த புலவர்களின் நுண்ணிய கவனிப்பை வகைப்படுத்துதல்.
3. இம்மலர்கள் அகப்பாடல்களில் பெறும் உளவியல் குறியீட்டுப் பொருளை விளக்குதல்.

4. இப்பதிவுகளைப் பாரம்பரியச் சுற்றுச்சூழல் அறிவு (TEK) என்ற நவீனக் கோட்பாட்டுச் சட்டகத்தில் மதிப்பிடுதல்.

1.2 ஆய்வு அணுகுமுறைகள்

- விளக்கமுறை அணுகுமுறை
- பகுப்பாய்வுமுறை
- ஒப்பீட்டுமுறை
- சூழலியல் அணுகுமுறை
- மரபுசார் அறிவியல் அணுகுமுறை



படம் 1. சங்க இலக்கியத்தில் கார்கால மலர்களும் சூழலியல் கட்டமைப்பும்

.

2. கார்காலமும் தாவரவியலும்: சங்கத் தமிழர்களின் பருவக்காலக் கவனிப்பு

சங்கத் தமிழர் ஓர் ஆண்டைக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பெரும்பொழுதுகளாகப் பகுத்தனர். இவற்றுள் கார்காலம் தமிழ்மாதங்களில் ஆவணி, புரட்டாசி ஆகிய இரண்டு மாதங்களைக் குறிக்கும்; இன்றைய வானிலையியலில் தென்மேற்குப் பருவக்காற்றின் பின்பகுதியும் வடகிழக்குப் பருவக்காற்றின் தொடக்கமும் இதனுள் அடங்கும். கார்காலம் மழைக்காலம் என அறியப்பட்டாலும், சங்க இலக்கியத்தில் அதன் இடம் தனித்த ஆய்வுக்குரியதாகும்.

2.1 பருவ மாற்றமும் இயற்கையும்

கார்காலம் தொடங்கும்போது முல்லை நிலத்தின் செம்மண்ணும் சரளைமண்ணும் நிறைந்த நிலம் முதல் மழைநீரை விரைவாக உறிஞ்சுகிறது. மண்ணின் ஈரப்பதம்

உயர்ந்ததும் உறங்கிக் கிடந்த விதைகளும் கிழங்குகளும் முளைக்கின்றன; கோடையில் இலை உதிர்த்த புதர்ச் செடிகள் தளிர்க்கின்றன. முல்லைப்பாட்டின் தொடக்கமே இந்தக் கார்காலத் தொடக்கத்தைக் காட்சிப்படுத்துகிறது:

”பாடுஇமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை.”
(முல்லைப்பாட்டு, 4–6)

கடல் நீரைப் பருகிய மேகம் மலைகளைச் சூழ்ந்து மழையாகப் பொழிகிறது என்ற முல்லைப்பாட்டின் இவ்வரிகள் நீரின் சுழற்சியைக் குறிக்கின்றன. மண்ணும் மழையும் உயிர்வாழ்வின் அடிப்படைகள் என்ற தெளிவு செவ்வியல் இலக்கியங்களில் தெளிவாக வெளிப்படுகிறது மழை பெய்த சில நாட்களில் காடு மலர்களால் நிறைவது மழைநீருக்கும் தாவரங்களின் பூக்கும் தூண்டலுக்கும் இடையிலான நேரடித் தொடர்பைக் காட்டுகிறது. இன்றைய தாவரவியல் இதனைப் பருவக்கால உயிரியல் (phenology) என்று அழைக்கிறது. குறுந்தொகைப் பாடல் ஒன்று இந்தப் பருவச் செயல்பாட்டை இன்னும் நுட்பமாகக் காட்டுகிறது. பருவம் தவறிப் பெய்த மழையைக் கார்மழை என்று நம்பி மயில்கள் ஆடின; பிடவமும் பூத்தது என்று தலைவி மயிலை 'மடவ' என்று பழிக்கிறாள்:

”மடவ வாழி! மஞ்ஞை மாஇனம்
கால மாரி பெய்தென அதன் எதிர்
ஆலலும் ஆலின; பிடவும் பூத்தன;”

(குறுந்தொகை, 251; 1-3)

இங்குப் புலவர் ஒரு நுண்ணிய உயிரியல் உண்மையைப் பதிவு செய்கிறார். தாவரமும் பறவையும் காலம் அல்லாத மழைக்கும் எதிர்வினை யாற்றுகின்றன. அதாவது, மலர்தலுக்குக் காரணம் நாள்காட்டி அல்ல; மண்ணின் ஈரம். தலைவி மட்டுமே காலக் கணக்கை அறிந்தவள். மலர்தலின் இந்தக் காரணமும் விளைவும் பாடலின் அழகியலையும் அறிவியலையும் ஒருசேர காட்டுகின்றன.

2.2 ஐந்திணைக் கோட்பாடும் முல்லையும்


"மாயோன் மேய காடுறை உலகமும்"

(தொல். அகத். 5)

என்று தொல்காப்பியர் முல்லை நிலத்தை முதலில் வைக்கிறார். அன்பின் ஐந்திணையில் தொல்காப்பியர் சுட்டும் முதன்மைத் திணை முல்லை. முல்லைத் திணையின் முதற்பொருள் காடும் காடு சார்ந்த இடமும், கார்காலமும் மாலையும்; உரிப்பொருள் இருத்தலும் அதன் நிமித்தமும். கருப்பொருளில் முல்லை, பிடவம், தோன்றி, கொன்றை, காயா ஆகிய மலர்கள் இடம்பெறுகின்றன. முல்லைத் திணைப் பாடல்களில் இக்கருப்பொருட்கள் காலத்தையும் நிலத்தையும் உணர்வையும் ஒருசேர உணர்த்தும் கருவிகளாகச் செயல்படுகின்றன.

முல்லை நிலத்தின் மக்களான ஆயர்களின் வாழ்வும் கார்காலத்தோடு பிணைந்தது. மழைக்காலத்தில் புல் தளிர்ப்பதால் ஆநிரை மேய்ச்சல் செழிக்கிறது. காடுசார் பகுதிகளில் ஆயர் இன்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்றனர், எனவே கார்கால மலர்களைக் கூர்ந்து நோக்குவது முல்லை நில மக்களுக்கு வாழ்வாதாரத் தேவையாகவும் இருந்திருக்க வேண்டும். மலர்கள் மலர்ந்தால் மழை வந்துவிட்டது; மேய்ச்சல் நிலம் தயார் என்ற செய்தியையும் அவை தந்தன.

"திணைக் கோட்பாடு சங்க இலக்கியத்தோடு நிற்கவில்லை. அற இலக்கியங்களிலும் அதன் நீட்சி ஒழுக்க மரபுப் பின்புலத்தில் தொடர்கிறது." (சரவணஜோதி, 2020). "**கீழ்க்கணக்கு அகநூல்களிலும் திணைக்குரிய மலர்கள் தொடர்ந்து பாடப்பட்டன." (பெனடி, 2022).** இதனால் முல்லைக்கும் கார்கால மலர்களுக்கும் இடையிலான இணைப்பு நீண்ட இலக்கிய மரபாக நிலைத்தது என்பது தெளிவு.



படம் 2. கார்காலமும் தாவரவியலும்: சங்கத் தமிழரின் பருவக்காலக் கவனிப்பு

சங்கத் தமிழர் ஆண்டை ஆறு பெரும்பொழுதுகளாகப் பகுத்தனர்; இதில் கார்காலம் (ஆவணி-புரட்டாசி) மழைக்காலமாகும். முல்லைப்பாட்டு மற்றும் குறுந்தொகை பாடல்கள், மழை நீரின் சுழற்சியையும், தாவரங்கள் மழைக்கு எதிர்வினையாற்றி மலர்வதையும் அறிவியல் பூர்வமாகப் பதிவு செய்துள்ளன. இக்கவனிப்பு முல்லை நில மக்களின் வாழ்வியலோடும், திணைக் கோட்பாட்டோடும் நெருங்கிய தொடர்புடையது.

3. மலர்களின் வர்ணஜாலம்: நிறமும் வடிவமும் (Color & Form Dynamics)

கார்காலக் காடு சங்கப் புலவர்களுக்கு ஒரு வண்ணக் காட்சியாகவே தோன்றியது. பொன்னிறம் (கொன்றை), வெண்மை (முல்லை, தளவம், பிடவம்), நீலம் (காயா),

செந்நிறம் (தோன்றி, காந்தள்) என நான்கு நிற மலர்களும் ஒரே காலத்தில் மலரும் தன்மை கொண்டது. நிறம் அழகியல் கூறு மட்டுமல்ல; அது தாவரத்தை அடையாளம் காணும் முதல் அளவுகோலும் ஆகும்.

3.1 பொன்னிறக் கொன்றையும் வெண்ணிறத் தளவமும்

கொன்றையின் மஞ்சள் மலர்கள் பொன்னைத் தொங்கவிட்டது போல் தோன்றும். **"சங்க இலக்கியத்தில் மஞ்சள் நிற மலர்கள் தனித்த இடம் பெறுகின்றன; அவற்றின் அழகும் மருத்துவப் பயனும் ஒருசேரப் பாராட்டப்பட்டன." (ராணி & கலைச்செல்வி, 2022).** முல்லைப்பாட்டில் நப்பூதனார் தனது பாடலில் கார்காலக் காட்டைக் காட்டுகிறார்.

> "செறிஇலைக் காயா அஞ்சனம் மலர
> முறிஇணர்க் கொன்றை நன்பொன் கால
> கோடல் குவிமுகை அங்கை அவிழ
> தோடுஆர் தோன்றி குருதி பூப்ப."
> (முல்லைப்பாட்டு, 93–96)

இதில் நான்கு வரிகளில் நான்கு நிறங்கள் அமைகின்றன. காயா மை (அஞ்சனம்) போல் நீலமாக மலருகிறது; கொன்றை நல்ல பொன்னைச் சொரிகிறது; கோடல் (காந்தள் இனம்) உள்ளங்கை போல் விரிகிறது; தோன்றி குருதி போல் சிவக்கிறது. இங்கு ஒவ்வொரு உவமையும் நிறத்தை மட்டுமின்றி வடிவத்தையும் சுட்டுகிறது. கோடலின் குவிந்த முகை விரிவதை விரிகும் கையோடு ஒப்பிடுவது மலர்தலின் இயக்கத்தையே காட்டுகிறது. மொட்டு முதல் மலர் வரையிலான நிலைகளுக்குத் தமிழில் தனிச் சொற்கள் (அரும்பு, மொட்டு, முகை, போது, மலர், அலர்) இருக்கிறது. இந்தச் சொல்வளம் மலர்தலைத் தொடர்ந்து கவனித்ததன் விளைவாக எழுந்தவை.

3.2 நீலக் காயாவும் செந்நிறத் தோன்றியும்:


நீலமும் சிவப்பும் எதிர்மறை நிறங்கள். காயாவின் நீலம் கார்மேகத்தின் நிறத்தையும், முல்லை நிலத் தெய்வமான மாயோனின் நிறத்தையும் நினைவூட்டுகிறது. தோன்றியின் சிவப்பு தீயையும் குருதியையும் நினைவூட்டுகிறது. இவ்விரண்டும் ஒரே காட்சிச் சட்டகத்தில் இடம்பெறும்போது காடு ஒரு முழுமையான ஓவியமாக மாறுகிறது. இதனையே புலவர்கள் 'பூவணி' என்ற சொல்லால் சுட்டினர்.

> "காயா, கொன்றை, நெய்தல், முல்லை
> போதவிழ் தளவமொடு பிடவு அலர்ந்து கவினிப்
> பூவணி கொண்டன்றால் புறவே."
> (ஐங்குறுநூறு, 412: 1–3)

காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் ஆகிய மலர்கள் மலர்ந்து கானகம் முழுவதும் பூக்கள் ஆபரணத்தை அணிந்தாற்போல அழகுடன் திகழ்ந்தது என்பது இதன் பொருள். இங்கு மூன்று அறிவியல் கூறுகள் கவனிக்கத்தக்கவை. முதலாவது, ஆறு மலர்களும் ஒரே நேரத்தில் மலர்வது ஒரு பருவ ஒத்திசைவாகும்.

இரண்டாவது, கொடி (முல்லை, தளவம்), புதர் (பிடவம், காயா), மரம் (கொன்றை), நீர்த்தாவரம் (நெய்தல்) என வெவ்வேறு வளரியல்புகள் ஒரே சூழலில் இடம்பெறுகின்றன. மூன்றாவது, மழைக்காலத்தில் நிரம்பிய குளங்களில் நெய்தல் பூத்ததைக் குறிப்பதால் நிலத்தாவரமும் நீர்த்தாவரமும் ஒருசேரக் காட்சிப்படுகின்றன.

புலவர்கள் மலர்களை ஒவ்வொன்றாகக் காணாமல் ஒரு சூழல் கூட்டமாக (plant community) கண்டுள்ளனர். இது நவீன தாவரச் சூழலியலின் அடிப்படைக் கருத்தாகும்.



படம் 3. கார்கால மலர்களின் வர்ணஜாலம்: நிறமும் வடிவமும்

சங்க இலக்கியத்தில் கார்காலக் காடு பல வண்ணக் காட்சியாக விரிகிறது. முல்லைப்பாட்டு பொன்னிறக் கொன்றை, வெண்ணிறத் தளவம், நீலக் காயா, செந்நிறத் தோன்றி ஆகியவற்றின் நிறம் மற்றும் வடிவ அழகைப் பதிவு செய்கிறது. ஐங்குறுநூறு, நிலம் மற்றும் நீர்த்தாவரங்கள் ஒரே நேரத்தில் பூத்துக் குலுங்குவதை ஒரு சூழலியல் தொகுப்பாகக் காட்டுகிறது.

4. கார்கால மலர்களின் தனித்தன்மைகளும் இலக்கியப் பயன்பாடும்

ஏழு மலர்களும் வளரியல்பில் வேறுபட்டாலும் கார்காலம் என்ற ஒரே பருவத்தால் இணைக்கப்படுகின்றன. கீழே உள்ள அட்டவணை இவற்றின் வளரியல்பு, நிறம், அறிஞர்கள் காட்டும் தாவரப் பெயர், சங்கச் சான்று ஆகியவற்றைத் தொகுத்துத் தருகிறது. தளவம், தோன்றி ஆகியவற்றின் அடையாளத்தில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு.

மலர்	வளரியல்பு	நிறம்	தாவரப் பெயர் (அறிஞர் அடையாளம்)	சங்கச் சான்று
முல்லை	படருங்கொடி	வெண்மை	*Jasminum auriculatum*	ஐங். 412; முல்லை. 9–10
பிடவம்	குறும்புதர்	வெண்மை, கொத்து	*Randia malabarica*	குறுந். 66; பதிற். 66
தளவம்	கொடி	வெண்மை	*Jasminum* இனம்	ஐங். 412; பதிற். 66
கொன்றை	மரம்	பொன்மஞ்சள், தொங்கும் இணர்	*Cassia fistula*	குறுந். 21; முல்லைப். 94
தோன்றி	கிழங்குக்கொடி	குருதிச் சிவப்பு	*Gloriosa superba* (செந்நிறம்)	முல்லைப். 96; பரி. 11
காந்தள்	கிழங்குக்கொடி	தீயனைய சிவப்பு	*Gloriosa superba*	குறுந். 1; முல்லைப். 95 (கோடல்)
காயா	சிறுமரம்/புதர்	நீலமணி	*Memecylon umbellatum*	ஐங். 412; முல்லைப். 93

4.1 முல்லையும் பிடவமும்

முல்லை முல்லை நிலத்தின் தலைமை மலர்; நிலத்திற்கும் திணைக்கும் தன் பெயரைத் தந்தது. கார்காலத்தின் வருகையைத் தன் மலர்தல் மூலம் பறைசாற்றும் கொடி இது. முல்லைப்பாட்டில் முதுபெண்டிர் நற்சொல் கேட்கும்போது முல்லை மலரைத் தூவி வழிபடுகின்றனர் என்பதை

> "நாழி கொண்ட நறுவீ முல்லை
> அரும்பு அவிழ் அலரி தூஉய் கைதொழுது"
>
> *(முல்லைப்பாட்டு, 9–10)*

இப்பாடலின் மூலம் அறியமுடிகிறது. முல்லை இங்கு நம்பிக்கையின் குறியீடாகிறது.

பிடவம் மழைக்காலத்தில் கொத்தாக மலர்ந்து காடெல்லாம் நறுமணம் பரப்பும் குறும்புதர்ச் செடி. சங்க இலக்கியத்தில் பிடா, பிடவு எனக் குறிப்பிடப்படுகிறது.

> “தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற்கு அரும்பீன்று
> முளிமுதற் பொதுளிய முப்புறப் பிடவமும்”
>
> *(கலித்தொகை. 101 : 1-2)*

மழைத்துளிகளினால் குளிர்ச்சி அடைந்த முல்லை நிலத்தில் கார்காலத்தின் முதல் மழையில் அரும்புகள் விட்டு தழைத்துப் பூக்கும் முட்களை உடைய பிடவம் பிடவமலரின் தன்மையை இப்பாடலில் அறிய முடிகிறது

4.2 தளவமும் கொன்றையும்

தளவம் வெண்ணிற மலர்களை உடையது; முல்லையுடன் சேர்ந்து கார்காலத்தில் கொடி படர்ந்து வளரும் இயல்புடையது. பிடவமும் தளவமும் இணைந்து வருவதை பதிற்றுப்பத்து காட்டுகிறது:

"பிடவம் மலரத் தளவம் நனைய..."
(ஐங்குறுநூறு. 499: 1)

பிடவம் மலர்ந்துவிட, தளவம் அரும்பு (நனை) நிலையில் இருக்கிறது. இரண்டு தாவரங்களின் மலர்தலில் உள்ள சிறிய கால இடைவெளியயும் அறியமுடிகிறது. இது பருவக்கால உயிரியலில் 'flowering sequence' எனப் படும் மலர்தல் வரிசைக்குச் சான்றாக உள்ளது.

கொன்றை பொன் போன்ற துகளுடைய, கொத்துக்கொத்தாகத் தொங்கும் மஞ்சள் நிற மலர்களைக் கொண்டது. மகளிர் கூந்தலில் அணியும் பொன் அணிகலன்களோடு அதன் இணர்கள் ஒப்பிடப்படுகின்றன

”பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றை”

(குறுந்தொகை, 21; 2-3).

”மஞ்சள் நிற மலர்களுக்கு மருத்துவக் குணங்களும் உண்டு” என்று **ராணி மற்றும் கலைச்செல்வி (2022)** சுட்டுகின்றனர். இதனால் கொன்றை காட்சிப் பொருளாகவும் பயன்பாட்டுப் பொருளாகவும் இரட்டை இடம் பெறுகிறது.

4.3 தோன்றி, காந்தள் மற்றும் காயா

தோன்றியும் காந்தளும் நெருப்பைப் போன்ற செந்நிற மலர்கள்; கார்காலத்தின் செழிப்பை வெளிப்படுத்துபவை. குறிஞ்சிக்குரிய காந்தளை முருகனின் குன்றம்

"குருதிப் பூவின் குலைக் காந்தட்டே"

(குறுந்தொகை;1: 4)

என்று குறிக்கும். முல்லைநிலக் காட்சிகளிலும் இவை இடம்பெறுவது முல்லையும் குறிஞ்சியும் இணையும் இடைநிலத் தாவர வளத்தைக் காட்டுகிறது.

"காந்தள் தாய தோன்றி தீயென மலரும்"

(பரிபாடல், 11)


காந்தள் மலர்கள் பரவியிருக்கும் இடங்களில் தோன்றி மலர்கள் நெருப்பைப்போலச் சிவந்து மலரும். இரண்டு தாவரங்களும் ஒரே இடத்தில் இணைந்து வளரும் நிலையை இப்பாடல் வரி பதிவு செய்கிறது.

காயா நீலமணி போன்ற பூக்களை உடைய மரம். கார்கால மேகங்களின் நிறத்தை நினைவூட்டும் வண்ணம் பூத்துக் குலுங்குவது.

"செறிஇலைக் காயா அஞ்சனம் மலர"

(முல்லைப்பாட்டு, 93)

என்ற தொடர் இலைகள் நெருக்கமாக அமைந்த அதன் வடிவத்தைச் சுட்டுகிறது. இலை அமைப்பு (phyllotaxy) போன்ற தாவரவியல் விவரம் ஒரு சொல்லில் அடங்கியுள்ளது.



படம் 4. கார்கால மலர்களின் தனித்தன்மைகளும் இலக்கியப் பயன்பாடும்

இப்படமானது முல்லை, பிடவம், தளவம், கொன்றை, தோன்றி, காந்தள் மற்றும் காயா ஆகிய ஏழு கார்கால மலர்களின் வளரியல்பு, நிறம், அறிவியல் பெயர்கள் மற்றும் சங்க இலக்கியச் சான்றுகளை ஒரு அட்டவணையாகவும், அவற்றின் சிறப்புகளைப் பற்றிய விளக்கங்களாகவும் அழகாகத் தொகுத்துக் காட்டுகிறது.

5. காதலும் காத்திருப்பும்: மலர்களின் உளவியல் குறியீடுகள் (Emotional Metaphors)

முல்லைத் திணையின் உரிப்பொருள் 'இருத்தல்'. வினைமுடித்துக் கார்காலத் தொடக்கத்தில் திரும்புவதாகச் சொல்லிச் சென்ற தலைவனுக்காகத் தலைவி ஆற்றியிருக்கும் நிலை இது. இங்கு மலர்கள் இரட்டைப் பணி செய்கின்றன. அவை காலம் வந்துவிட்டதை அறிவிக்கும் சான்றுகள்; அதே நேரத்தில் தலைவன் வராததை நினைவூட்டும் துயரக் குறியீடுகள்.

5.1 கார்காலத் தலைவியின் துயரம்

கார்காலம் வந்ததும் வினைமுடித்து வருவதாகச் சென்றுள்ள தலைவன் வராததால், மலர்ந்துள்ள மலர்களைக் காணும் தலைவியின் மனம் ஏங்குகிறது. இந்த உளவியல் நிலையைக் குறுந்தொகைப் பாடல் நுட்பமாகக் காட்டுகிறது:

"வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு

பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பின் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் கார் எனக் கூறினும்
யானோ தேறேன் அவர் பொய்வழங் கலரே.”
(குறுந்தொகை 21; 1 -5)

கொன்றை மலர்ந்து காடு கார்காலம் வந்தது என்று சொன்னாலும், தலைவன் பொய் சொல்லாதவன்; எனவே இது கார்காலம் அன்று என்று தலைவி மறுக்கிறாள். இங்கு இரண்டு அறிவு முறைகள் மோதுகின்றன. ஒன்று இயற்கைச் சான்று (மலர்தல்); மற்றொன்று மனித நம்பிக்கை (வாக்கு). தலைவி இயற்கைச் சான்றையே மறுத்து தன் அன்பை நிலைநிறுத்துகிறாள். கொன்றையின் மலர்தலைக் கார்காலத்தின் உறுதியான அடையாளமாகச் சமூகம் ஏற்றிருந்தது என்பதே இந்த மறுப்பின் அழுத்தத்தைத் தருகிறது. மயிலையும் பிடவத்தையும் 'மடமை' என்று பழிக்கும் தலைவியும் இதே உளவியல் நிலையில் இருக்கிறாள்.

5.2 தூது செல்லும் மலர்கள்

மலர்களின் நறுமணமும் காட்சியும் தலைவனின் நினைவைத் தூண்டி, பிரிவின் வலியைத் தீவிரப்படுத்துகின்றன. கருப்பொருளின் வழியே உள்ளத்து உணர்வு மறைமுகமாக வெளிப்படுகிறது. மலர் இங்கு நேரடியாகத் தூது செல்வதில்லை; அதன் இருப்பே செய்தியைச் சுமந்து வருகிறது.

"கார்செய் தன்றே, கவின்பெறு கானம்"
(அகநானூறு;4 :7)

கார்காலத்தை எதிர்பார்த்து மலர்ந்து அழகுபெறும் முல்லை நிலக் கானகம் இது. கானகத்தைத் தலைவியைப் போலவே காத்திருக்கும் ஒன்றாகக் காட்டுகிறது. கானம் காரைப் பெற்று அழகுறுகிறது; தலைவி தலைவனைப் பெறாமல் வாடுகிறாள். இந்த முரணே பாடலின் உணர்வுச் செறிவு. கானத்தின் பூவணிக்கும் தலைவியின் நலனழிவுக்கும் இடையிலான இடைவெளியைத் தான் புலவர் கவிதையாக்குகிறார்.

5.3 கற்பும் முல்லையும்

முல்லைச் சூடுவது மகளிரின் கற்புநெறிக் குறியீடாகவும் சங்க மரபில் கருதப்பட்டது.இருத்தல் என்பது வெறும் காத்திருப்பு அல்ல; அது ஒரு அறநிலை. கார்காலம் தவறாமல் வருவதுபோலத் தலைவன் வருவான் என்ற நம்பிக்கையைப் பருவத்தின் ஒழுங்கு உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு பருவச் சுழற்சியும் மனித உறவின் நம்பகத்தன்மையும் ஒன்றுக்கொன்று உவமையாகின்றன.



படம் 5. காதலும் காத்திருப்பும்: மலர்களின் உளவியல் குறியீடுகள்

கார்காலத்தில் தலைவன் வருவதாகச் சொல்லிச் சென்றான். ஆனால் அவன் வரவில்லை. பூத்துள்ள மலர்களைக் காணும்போது தலைவி வருந்துகிறாள்; இச்செய்தி தலைவனின் நினைவைத் தூண்டுகிறது. எனினும், தலைவி இயற்கையின் சான்றுகளை மறுத்து, தன் அன்பு, கற்பு நெறி மற்றும் தலைவன் மீதான நம்பிக்கையோடு காத்திருக்கிறாள்.

6. தமிழர்களின் பாரம்பரிய சுற்றுச்சூழல் அறிவு (Traditional Ecological Knowledge - TEK)

பாரம்பரியச் சுற்றுச்சூழல் அறிவு என்பது ஒரு சமூகம் தலைமுறை தலைமுறையாகத் தன் சூழலைக் கவனித்துத் திரட்டிய அறிவு. இது எழுத்தில் அறிவியல் கோட்பாடாக அமைவதில்லை; பாடல், பழமொழி, சடங்கு, தொழில் முறை ஆகியவற்றில் பொதிந்துள்ளது. சங்ககாலத் தமிழர் இயற்கையோடு இசைந்து வாழ்ந்தனர்; தாவரங்களையும் மரங்களையும் பேணிக் காத்தனர். கார்கால மலர்கள் பற்றிய சங்கப் பதிவுகளை இந்த அறிவின் இலக்கிய வடிவமாகக் கொள்ளலாம்.

6.1 மழைக்கும் மலர்தலுக்கும் உள்ள தொடர்பு

வறண்ட நிலம் மழைநீரைப் பெற்றவுடன் சட்டென்று மலர்களைத் தருவதைச் சங்கப் புலவர்கள் தொடர்ந்து பதிவு செய்தனர். இது ஒரு உயிரியல் கவனிப்பு. தோன்றி, காந்தள் போன்ற கிழங்குக்கொடிகள் கோடையில் மண்ணுக்கடியில் உறங்கிக் கிடந்து, மழை வந்ததும் முளைத்து மலருகின்றன. இன்றைய தாவரவியல் இவற்றை மண்ணடித்தாவரங்கள் (geophytes) என்று வகைப்படுத்துகிறது.

> “மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
> கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
> பருவம் வாரா அளவை நெரிதரக்

கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே.”

(குறுந்தொகை 66 ;1 -5)

இக்குறுந்தொகைப் பாடலில் பருவம் தவறிய மழைக்கும் கொன்றை பூத்தது என்பது, மலர்தலுக்குக் காரணம் மண்ணின் ஈரமே என்ற தெளிவைக் காட்டுகிறது. மலர்கள் மலரும் நேரத்தைக் கொண்டு மழையின் வருகையையும் மேய்ச்சல் நிலத்தின் தயார்நிலையையும் தமிழர் அறிந்தனர்.

6.2 பல்லுயிர்ச் சூழல் (Biodiversity)

மலர்களை நம்பி வரும் வண்டுகள், தேனீக்கள், பறவைகள் வழியாகச் சங்கப் புலவர்கள் கார்காலச் சூழலியல் சமநிலையைப் பதிவு செய்துள்ளனர்.

"வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு"

(குறுந்தொகை;21;1)

என்ற அடி கொன்றை மலர்களில் வண்டுகள் மொய்ப்பதைக் காட்டுகிறது. முல்லைப்பாட்டில்

"யாழிசை இனவண்டு ஆர்ப்ப"

(முல்லைப்பாட்டு, 8)

முல்லை மலர்களைச் சூழ்ந்த வண்டின் ஒலியைப் பதிவு செய்கிறது. இவை மகரந்தச் சேர்க்கையின் (pollination) இலக்கியப் பதிவுகள். மலர்கள் மலராவிட்டால் வண்டுகள் வரா; வண்டுகள் வராவிட்டால் விதைகள் உருவாகா. இந்தச் சங்கிலிச் சார்பு புலவர்களின் காட்சியில் இயல்பாக இடம்பெறுகிறதுதாவரம், பூச்சி, பறவை, விலங்கு, மனிதன் என அனைத்தும் ஒரே பருவச் சுழற்சியில் பிணைந்திருக்கின்றன என்பதை இதன்மூலம் அறியமுடிகிறது.

6.3 இன்றைய சூழலில் இவ்வறிவின் பொருத்தம்

காலநிலை மாற்றத்தால் பருவமழையின் தொடக்கமும் அளவும் மாறிவருகின்றன. இந்தச் சூழலில், மலர்தலைக் கொண்டு பருவத்தை அறியும் சங்கத் தமிழரின் முறை இன்றைய பருவக்கால உயிரியல் கண்காணிப்புக்கு (phenological monitoring) ஒரு வரலாற்றுத் தொடக்கமாகும். கொன்றை, காந்தள், காயா ஆகியவற்றின் மலர்தல் நாள்களைத் தொடர்ந்து பதிவு செய்தால், சங்கப் பதிவுகளோடு ஒப்பிட்டுப் பருவ மாற்றத்தை அளவிட முடியும். இலக்கியமும் அறிவியலும் ஒரே தளத்தில் இணையும் .



படம் 6. தமிழரின் பாரம்பரிய சுற்றுச்சூழல் அறிவு: கார்கால மலர்கள் மற்றும் சங்க இலக்கியம்

7. முடிவுரை

சங்கத் தமிழர் கார்கால மலர்களைப் பருவத்தின் உயிரியல் குறிகாட்டிகளாகக் கண்டனர் என்பதே இவ்வாய்வின் முடிவு. இவ்வாய்வின் முடிவை பருவநிலை அறிவு,தாவர அறிவு,உணர்வு அறிவு என இதனை மூன்று நிலைகளில் தொகுக்கலாம்

இவ்வாறு, சங்க இலக்கியம் அழகியலையும் அறிவியலையும் ஒருங்கே கொண்ட பாரம்பரியச் சுற்றுச்சூழல் அறிவின் கருவூலமாகத் திகழ்கிறது. காலநிலை மாற்றத்தால் பருவங்கள் தடம் மாறும் இன்றைய சூழலில், மலர்தலைக் கவனித்துப் பருவத்தை அறிந்த இம்மரபு மீண்டும் கவனிக்கத்தக்கதாகும்.

8. துணைநூற்பட்டியல்

சுப்பிரமணியன், ச. வே. (பதிப்பாசிரியர்). (2021). எட்டுத்தொகை: மூலமும் தெளிவுரையும் (தொகுதி 1: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு). மணிவாசகர் பதிப்பகம். (முதல் பதிப்பு - 2010; நான்காம் பதிப்பு - 2021).

சுப்பிரமணியன், ச. வே. (பதிப்பாசிரியர்). (2021). எட்டுத்தொகை: மூலமும் தெளிவுரையும் (தொகுதி 2: பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை). மணிவாசகர் பதிப்பகம். (முதல் பதிப்பு - 2010; நான்காம் பதிப்பு - 2021).

சுப்பிரமணியன், ச. வே. (பதிப்பாசிரியர்). (2021). எட்டுத்தொகை: மூலமும் தெளிவுரையும் (தொகுதி 3: அகநானூறு, புறநானூறு). மணிவாசகர் பதிப்பகம். (முதல் பதிப்பு - 2010; நான்காம் பதிப்பு - 2021).

சாமி, பி. எல். (1993). சங்க நூல்களில் சில உயிரினங்கள். சேகர் பதிப்பகம்.

மோகன், இரா. (உரையாசிரியர்). (2007). பத்துப்பாட்டு: முதல் பகுதி (மூலமும் உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். (முதல் பதிப்பு - 2004; மூன்றாம் அச்சு - 2007).

நாகராசன், வி. (உரையாசிரியர்). (2007). பத்துப்பாட்டு: பகுதி - 2 (மூலமும் உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். (முதல் பதிப்பு - 2004; மூன்றாம் அச்சு - 2007).

சீனிவாசன், கு. (1986). சங்க இலக்கியத் தாவரங்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சங்கரநாராயணன், கு. (2023). சங்க இலக்கியத்தில் தொல்காப்பிய-மரபியல் காட்டும் மரவகை உறுப்புக்கள் [Tree type elements showing Tolkappiyam genetics in Sangam literature]. Shanlax International Journal of Tamil Research, 8(2), 34–38. https://doi.org/10.34293/tamil.v8i2.6732

சரவணஜோதி, சீ. (2020). அற இலக்கியமும் திணைக்கோட்பாட்டு மரபும் [Ethic literature and tradition of Thinai theory]. Journal of Tamil Studies, 1(1),29–38. https://ejournal.upsi.edu.my/index.php/JTS/article/download/3798/2448/11774

சரவணன், ப. (2018). சங்க இலக்கிய மொட்டுகள். Shanlax International Journal of Tamil Research, 3(2), 89–94. https://shanlaxjournals.in/journals/index.php/tamil/article/view/5549

சுபாஷினி, ப. (2019). தமிழ் இலக்கியங்களில் சுற்றுச்சூழல் சிந்தனைகள் [Environmental consciousness in Tamil literature]. Shanlax International Journal of Tamil Research, 4(1), 112–114. https://shanlaxjournals.in/journals/index.php/tamil/article/view/5403

பெனடி, கெ. (2022). கீழ்க்கணக்கு அகநூல்களில் மலர்கள் [Flowers in the Kilkkanakku Akam literature]. International Research Journal of Tamil, 4(S-22), 509–514. https://doi.org/10.34256/irjt224s-22278

முத்துலெட்சுமி, த., & மல்லிகா, ச. (2022). ஐங்குறுநூற்றில் இயற்கை சார் வாழ்வியல் [Natural life habitats in Ainkurunuru]. International Research Journal of Tamil, 4(Spl 2), 68–73. https://doi.org/10.34256/irjt22s211

ராணி, பொ., & கலைச்செல்வி. (2022). சங்க இலக்கியத்தில் மஞ்சள் நிற மலர்களின் தனித்துவமும் மருத்துவ குணங்களும். International Research Journal of Tamil, 4(S-25), 98–105. https://doi.org/10.34256/irjt224s2518

ஜனார்த்தலி பேகம், அ. (2026). செவ்வியல் இலக்கியங்களில் மண்ணும் மழையும் [Ecological concepts of soil and rain in classical Tamil texts]. International Research Journal of Tamil, 8(3), 353–360. https://irjt.iorpress.org/index.php/irjt/article/download/2629/2130/4841